## சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம்: “இந்தித் திணிப்பு இல்லை” என்று கூறுவது அப்பட்டமான பொய்!

# தமிழ்நாடு எந்தவொரு மொழித்திணிப்பையும் ஏற்காது!

## ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதானுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டமான பதில்!

**சென்னை, ஏப். 7 -**

**“சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் இந்தித் திணிப்பு இல்லை என்று கூறுவது அப்பட்டமான பொய்” என்றும் “தமிழ்நாடு எந்தவொரு மொழித் திணிப்பையும் ஏற்காது” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரபிரதானுக்கு காட்டமான பதில் அளித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

தங்களின் கருத்துக்கள் மிகவும் பொறுப்பற்றவை மற்றும் அலட்சியமானவை என்பதோடு இந்தியாவின் பன்முகத்தன்மை, கூட்டாட்சி விழுமியங்கள் மற்றும் மாநிலங்களுக்கான மரியாதை ஆகியவற்றின் மீது கொண்டுள்ள ஆழ்ந்த அலட்சியத்தையே இவை பிரதிபலிக்கின்றன. தமிழ்நாடு #மும்மொழிக்கொள்கையை (Three Language Policy) உறுதியாக நிராகரிக்கிறது. இது ஏதோ ஒரு மொழிக்கு எதிரானது அல்ல; மாறாக மொழித் திணிப்பை எதிர்ப்பதும், அரசியல் சாசன உரிமைகளைப் பாதுகாப்பதுமாகும். முன்னதாக நாடாளுமன்றத்தில் தமிழர்களைப் பற்றி நீங்கள் பேசிய அவதூறு கருத்துகளும், அதனைத் தொடர்ந்து நீங்கள் கோரிய காலதாமதமான மன்னிப்பும், உங்களின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை முறையையே உறுதிப்படுத்துகின்றன.

**தமிழ்நாட்டை தண்டிக்கும் வகையில் நிதி நிறுத்தம்!**

“இந்தித் திணிப்பு இல்லை” என்று நீங்கள் கூறுவது அப்பட்டமான பொய் மற்றும் நேர்மையற்ற செயலாகும். தமிழ்நாடு போன்ற இந்தி பேசாத மாநிலங்களை, மிகக் குறைந்த விருப்பத் தேர்வுகளுடன் மூன்றாவது மொழியை ஏற்றுக்கொள்ளுமாறு ஒரு கொள்கை ரீதியாக நெருக்கடி கொடுக்கும் போதும், கல்விக்கான நிதி விடுவிப்பு அதனுடன் இணைக்கப்படும்போதும், அங்கே ‘சுய விருப்பம்’ என்ற பேச்சுக்கே இடமில்லை.

சமக்ர சிக்ஷா’ (Samagra Shiksha) திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய 2,200 கோடி ரூபாய் நிதியை, இந்தித் திணிப்பை ஏற்க மறுத்ததற்காகத் தமிழ்நாட்டைத் தண்டிக்கும் நோக்கில் சட்டவிரோதமாக நிறுத்தி வைத்திருப்பது உங்களின் அதிகாரத் துஷ்பிரயோகத்தையே காட்டுகிறது.

**ஒன்றிய அரசின் கருணைத் தொகை அல்ல!**

இவை ஒன்றிய அரசு விருப்பப்பட்டு வழங்கும் கருணைத் தொகையல்ல; வரிப்பணம் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைத்தொகை. இதனை எக்காரணம் கொண்டும் ஒரு மிரட்டல் கருவியாகப் பயன்படுத்த முடியாது.

ஒன்றைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். நெகிழ்வுத்தன்மை என்ற போர்வையிலோ, நிதி நெருக்கடியின் மூலமாகவோ அல்லது தேசிய நலன் என்ற பெயரிலோ முன்னெடுக்கப்படும் எந்தவொரு மொழித் திணிப்பையும் தமிழ்நாடு ஒரு போதும் ஏற்காது. இக்கொள்கை மாணவர்கள் மீது தேவையற்ற சுமையை ஏற்றுவதோடு, மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து, இந்தியாவின் பன்முகத்தன்மையைச் சிதைத்து “ஒரே இந்தியா” எனும் ஒற்றைத்தன்மை கொண்ட கட்டமைப்பிற்குள் கொண்டுவர முயல்கிறது.

உங்களின் வீண் ஆரவாரமான பேச்சுகளுக்கு நடுவே, இந்த அடிப்படைக் கேள்விகளை நீங்கள் தவிர்க்க கூடாது, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் உண்மையில் எந்த ‘மூன்றாவது இந்திய மொழி’ கற்பிக்கப்படுகிறது? வட இந்தியாவில்

உள்ள எத்தனை PM SHRI பள்ளிகளில் தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு போன்ற



தென்னிந்திய மொழிகளும், பெங்காலி, ஒடியா, மராட்டி போன்ற மொழிகளும் உண்மையாகவே பயிற்றுவிக்கப்படுகின்றன?

**எத்தனை கேந்திரிய பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது?**

எத்தனை கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது? கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை தமிழ் மற்றும் பிற தென்னிந்திய மொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்? சமஸ்கிருத வளர்ச்சிக்காக செலவிடப்படும் நிதியுடன் ஒப்பிடுகையில், தமிழ், கன்னடம், மலையாளம் மற்றும் ஒடியா போன்ற செம்மொழிகளின் வளர்ச்சிக்காக என்.டி.ஏ (NDA) அரசு எவ்வளவு செலவு செய்துள்ளது என்பதைத் தரவுகளுடன் உங்களால் சமர்ப்பிக்க முடியுமா? இதை உங்களுக்குச் சவாலாகவே விடுக்கிறேன்.

தமிழ்நாட்டில் பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்ற உங்களது கருத்து முற்றிலும் ஆதாரமற்றது. பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த முதலீட்டின் மூலம் இந்தியாவின் மிகவும் வலுவான பொதுக் கல்வி அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதிக மாணவர் சேர்க்கை மற்றும் நலத்திட்டங்களே இதற்கு சாட்சி.

இந்தித் திணிப்புக்கு எதிரான எமது எதிர்ப்பு அச்சத்தினால் உருவானதல்ல. எமது தாய்மொழி தமிழ் ஒருபோதும் வலுக்குன்றாது. தமிழும் தமிழர்களும் ஒவ்வொரு வகைத் திணிப்பையும், பண்பாட்டு ஊடுருவலையும் எதிர்கொண்டு, எதிர்த்து நின்று வென்றுள்ளனர். இது எங்களின் கொள்கை, கண்ணியம் மற்றும் இந்தியாவின் உண்மையான பன்முகத்தன்மையைப் பாதுகாப்பது சார்ந்த விஷயமாகும்.

**இருமொழிக் கொள்கையை ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்!**

பகுத்தறிவு மற்றும் சமூகத்தில் அனைவரின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் உருவான, சிறந்த கல்வி முடிவுகளைத் தந்து கொண்டிருக்கும் எங்களது இருமொழிக் கொள்கையை நாங்கள் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தமிழ்நாட்டின் கல்வித் தரம் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி ஆகியவற்றில் தமிழர்கள் உலகளவில் முத்திரை பதித்து வருவதே எமது மொழிக் கொள்கையின் வெற்றிக்குச் சான்று. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியும் இதில் ஆழமாக வேரூன்றியுள்ளன.

**தமிழ்நாடு நவீன கல்வியில் பின்தங்கியுள்ளதா?**

எங்களது வாதங்களைத் தரவுகள் மூலம் எங்களால் நிரூபிக்க முடியும், ஆனால் உங்களது வாதங்கள் வெறும் வெற்றுப் பேச்சுகளே தவிர, அதில் தரவுகள் ஏதுமில்லை.

தமிழ்நாட்டின் பள்ளிகள் நவீன கல்வியில் பின்தங்கியுள்ளன என்று கூறுவது அறியாமையாகும். மாணவர் சேர்க்கை மற்றும் கற்றல் தரத்தில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு அரசு உட்கட்டமைப்பில் பெரும் முன்னேற்றத்தை எட்டியுள்ளதுடன், 20 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயன்பெறும் வகையில் ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ போன்ற முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. திமுக தேர்தல் அறிக்கைப்படி, இத்திட்டம் 8ஆம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டு, கூடுதலாக 15 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள். பொதுக் கல்வியை நாங்கள் வெறும் செலவாகப் பார்க்காமல், சமூக முதலீடாகவே கருதுகிறோம்.

“ஒவ்வொரு இந்தியக் குழந்தையும் கட்டாயம் மூன்று மொழிகளைக் கற்க வேண்டும்” என்ற இந்த அறிவிப்பை, தமிழ்நாட்டு மண்ணில் நின்று மக்களிடம் வாக்கு கேட்கும்போது உங்களால் கூற முடியுமா என நான் சவால் விடுகிறேன்.

**பழனிசாமியின் நிலைப்பாடு என்ன?**

அதேபோல், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி அவர்களும், அவரது என்.டி.ஏ. கூட்டணிக் கட்சிகளும் தங்களது நிலையைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். பா.ஜ.க. ஆக்ரோஷமாக முன்னெடுக்கும் இந்த மும்மொழிக் கொள்கையை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

பழனிசாமி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுடன் நிற்கிறாரா? அல்லது இந்தியைத் திணிக்கத் துடிக்கும் டெல்லி எஜமானர்களின் பக்கம் நிற்கிறாரா என்பதைத் தெளிவாக விளக்க வேண்டிய நேரம் இது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## மற்றவர்கள் நடுவில் நிறைய பேர் வரலாம்; அதெல்லாம் வீணாகப் போகிற ஓட்டு:

# அ.தி.மு.க. இன்று அமித்ஷா தி.மு.க.வாக மாறிய காலகட்டத்தில் உள்ளது!

## காங்கேயம் சட்டமன்றத் தொகுதி பரப்புரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

காங்கேயம், ஏப். 7 -

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில், காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளரும், துணைப் பொதுச் செயலாளருமான மு.பெ.சாமிநாதனை ஆதரித்து, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, திருப்பூர் மாவட்டம் காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, வெள்ளகோவில் – ஈரோடு சாலை சந்திப்பு சாலையில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்குச் சேகரித்தார். கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு தி.மு.க.வினர் செங்கோல் கொடுத்தனர்.

தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:-

இந்த உச்சி வெயில் நேரத்திலேயும் உதய சூரியனுக்காக இங்கே குழுமி இருக்கக்கூடிய உங்களை எல்லாம் பார்க்கும் போது, வெற்றி நிச்சயம்; வெற்றி உறுதி செய்யப்பட்ட ஒன்று என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இந்த தேர்தல் என்பது, நம்முடைய முதலமைச்சர் சொல்லுவது போல, தமிழ்நாட்டிற்கும் என்.டி.ஏ.வுக்குமான தேர்தல்; தமிழ்நாட்டிற்கும் டெல்லியில் இருக்கக்கூடிய இந்துத்துவவாதிகளுக்குமான தேர்தல்; கீழடியில் விளங்கும் தமிழ் நாகரிகத்திற்கும் நாக்பூரில் இருந்து ஹிந்தி திணிக்க முயலும் அந்த ஆர்.எஸ்.எஸ். அடிப்படைவாதிகளுக்குமான தேர்தல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் சுயமரியாதை, உரிமைகள், நம் வீட்டு பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டிய தேர்தல் என்ற எண்ணத்தோடு பணியாற்றவும், வாக்களிக்கவும் வேண்டும்.

நாம் மக்களைச் சந்தித்து உதய சூரியனுக்கு ஓட்டு போடுங்கள் என்று கேட்கும் போது, மக்களுக்கு கொடுத்திருந்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி விட்டு தான் சந்திக்கிறோம். அமைச்சர் மு.பெ.சுவாமிநாதன் தன்னுடைய தொகுதியில் உள்ள மக்களுக்காக ஒவ்வொரு முறையும் போராடி, வாதாடி பணியாற்றி வருகிறார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உங்களின் வேட்பாளராக மறுபடியும் அமைச்சர் நிறுத்தி இருக்கிறார்கள்.

**துரோகம் செய்யும் எடப்பாடி பழனிசாமி!**

ஆனால், எதிர்க்கட்சியில் உள்ள வேட்பாளர்களை தேர்தல் முடிந்த பிறகு பார்க்கவே முடியாது. தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்யக்கூடிய கூட்டணிதான் அது. எடப்பாடி பழனிசாமியை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டிற்கும் துரோகம் செய்வார்; தன்னை வளர்த்த கட்சிக்கும் துரோகம் செய்யக்கூடியவர். யாருடைய காலில் விழுந்து பதவி பெற்றாரோ, இன்று அ.தி.மு.க.வில் அந்த அம்மையாருக்கே இடம் இல்லை.

முன்னாள் முதலமைச்சராக இருந்த ஓ.பி.எஸ். தமிழ்நாட்டை காப்பாற்றும் நோக்கில் தி.மு.க.வுடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். அதே நேரத்தில் தமிழ்நாட்டுக்கும், நம்முடைய மக்களுக்கும், விவசாயிகளுக்கும் எதிராக பா.ஜ.க. கொண்டு வந்த சட்டங்களை எதிர்த்து வாய் திறக்காதவராக இருந்துள்ளார்.

சிறுபான்மையின மக்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட சட்டங்களை எதிர்த்து எடப்பாடி பழனிசாமி வாய் திறக்கவில்லை. கிராமப்புறங்களில் உள்ள சாதாரண, சாமானிய மக்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 நாட்கள் வேலை உறுதியாக கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்று யாருக்காவது 100 நாள் வேலை கிடைக்கிறதா?

நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. ஒரு சட்டத்தை கொண்டு வந்துள்ளது. 100 நாள் வேலை கிடைக்காமல் போகும் வகையில் பல கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டம் அது. டெல்லியில் உட்கார்ந்தபடியே, உங்கள் பகுதியில் உள்ள கிராமங்களில் எத்தனை பேருக்கு



வேலை வழங்கலாம், என்ன வேலை வழங்கலாம் என்பதையும் அவர்கள் தீர்மானிக்கிறார்கள். எவ்வளவு வேலை வழங்க வேண்டும் என்பதையும் அவர்களே முடிவு செய்கிறார்கள்.

மேலும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்தத் திட்டத்திற்காக ஒன்றிய அரசு வழங்கிய நிதியையே குறைத்துவிட்டார்கள். இதனால், 100 நாள் வேலை வழங்கும் அந்தத் திட்டத்தையே முடக்க முயற்சி செய்கிறார்கள்.

100 நாள் வேலை திட்டத்தை ஊத்தி மூடிட்டு, இப்போது ஏன் எங்களிடம் ஓட்டு கேட்கிறீர்கள் என்று தேர்தலுக்காக வரும் பாஜகவினரிடம் கேளுங்கள். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை கொண்டு வந்த போது, வாய் திறக்காமல் அதை ஏற்றுக் கொண்டவர் தான் எடப்பாடி பழனிசாமி.

100 நாள் வேலைக்கு எதிரான அந்தச் சட்டத்தின் பெயரையே மாற்றிவிட்டார்கள். மகாத்மா காந்தி பெயரை நீக்கிவிட்டார்கள். அதற்கு ‘விபி ஸ்ரீராம்ஜி’ என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த ‘விபி ஸ்ரீராம்ஜி’ என்ற பெயரைப் பற்றி முழுவதும் கேட்காதீர்கள். எனக்கு ஹிந்தி தெரியாது.

தமிழ்நாட்டில் நம்ம பிள்ளைகள் எல்லாம் ஹிந்தி படிக்க வேண்டும் என்று திணித்தார்கள். ஆனால் இன்று, நம்ம பிள்ளைகள் ஹிந்தி படிக்காமலேயே பல நாடுகளுக்கு சென்று வேலை செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை கொண்டு வந்தபோது வாய் திறக்காமல் ஏற்றுக்கொண்டவர்கள், இன்று தேர்தல் வந்ததும் ஆட்சிக்கு வந்தால் 150 நாள் வேலை கொடுப்போம் என்று வாக்குறுதி அளிக்கிறார்கள்.

100 நாள் வேலைக்கே குரல் கொடுத்து காப்பாற்ற முடியாத நீங்கள், 150 நாள் வேலை கொடுக்கப் போகிறீர்களா? அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை யாரும் நம்புவதில்லை. 2016ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் செல்போன் வழங்குவோம் என்று கூறினார்கள். ஆனால் யாருக்காவது செல்போன் கிடைத்ததா? ஒருவருக்கும் கொடுக்கவில்லை.

முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இன்று வரை வேலை செய்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 30 வருஷமா உலகத்திலேயே கெடாமல் செயல்பட்டு வரும் தொலைக்காட்சி பெட்டியை வழங்கியது தலைவர் கலைஞர். இன்றும் பல வீடுகளில் மக்கள் அதை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கலைஞர் எப்படி தமிழ்நாட்டின் மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கிறாரோ, அதேபோல அவர் வழங்கிய தொலைக்காட்சி பெட்டியும் அந்த வீடுகளில் இன்னும் நிலைத்து நிற்கிறது.

முதலமைச்சர் அவர்கள் 1000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்குவோம் என்று கூறி, அதை நிறைவேற்றி காட்டியுள்ளார். அதேபோல், இந்த தேர்தல் முடிந்து மீண்டும் திமுக ஆட்சி பொறுப்பேற்ற உடனே, அந்தத் தொகை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**ரூ.8,000 கூப்பன்! வேண்டியதை வாங்கலாம்!**

விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தை கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர். அடுத்த முறை நாம் ஆட்சிக்கு வந்தவுடன், எந்தவித கட்டணமும் இல்லாமல் இயங்கக்கூடிய மின் மோட்டர்களை 20 லட்சம் விவசாயிகளுக்கு வழங்குவோம் என்று முதலமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான உதவித்தொகை மாதம் 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். அடுத்த முறை ஆட்சிக்கு வந்த உடனே, 35 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும். மேலும், ஆட்சிக்கு வந்தவுடன் காலை உணவு திட்டம் 8ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தி செயல்படுத்தப்படும்.

நம்முடைய முதலமைச்சர் 8000 ரூபாய்க்கு கூப்பன் கொடுக்கிறேன். உங்களுக்கு எது தேவையோ அதை வாங்கிக் கொள்ளுங்கள் என்று நமக்கு தேர்ந்தெடுக்கக்கூடிய அந்த வாய்ப்பை வழங்கியுள்ளார்.

இந்த பகுதியில் பல சாதனைகளை அமைச்சர் நிறைவேற்றி வழங்கியுள்ளார். வட்டமலை காரையோடை திட்டம் 1970ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் முயற்சியால் கொண்டு வரப்பட்டது. இந்த ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில் மட்டும் மூன்று முறை பரம்பிக்குளம்ஆழியாறு நீர்த்தேக்கத்திலிருந்து அதற்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டு, விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும் காலங்களில் அதற்கான நிரந்தரத் தீர்வை காணும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் 1996 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. மேலும், அமராவதி ஆற்றிலிருந்து 3 எம்.எல்.டி. தண்ணீர் கொண்டு வர 13 கோடி ரூபாய் செலவில் நடைபெறும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன; இது அமைச்சர் உங்களுக்காக பெற்றுத் தந்த முக்கியமான திட்டமாகும்.

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் அருந்ததியருக்கு 3% உள் ஒதுக்கீடு கொண்டு வரப்பட்டது. தற்போது நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள், அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தொழில் தொடங்குவதற்காக மூலதன மானியத்துடன் கடன் உதவி வழங்கி வருகிறார். அதன் மூலம் பலர் பயன் பெற்று வருகின்றனர்.

இந்த பகுதியில் உள்ள நெசவாளர்கள், இந்த தேர்தல் அறிக்கையில் கைத்தறி நெசவாளர்களுக்காக நீண்ட நாளாக கேட்டுக் கொண்டிருந்த கோரிக்கைகளை முன்வைத்தீர்கள். முதியோருக்கான உதவித்தொகையை 1200இலிருந்து 2000 ஆக உயர்த்த வேண்டும் என்ற உங்கள் கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வழங்கியுள்ளார்.

அது மட்டும் அல்ல, கைத்தறிகளை நவீனமாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் நீண்ட நாளாக இருந்து வந்தது. அதற்காக 90% மானியத்துடன் 10,000 வழங்கி கைத்தறிகளை நவீனமாக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்ததாக வரும் திராவிட மாடல் அரசு உங்களுடன் உறுதுணையாக நிற்கும்.

அதேபோல், ஜவுளி தொழிலில் கோவை, திருப்பூரில் பல தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். அவர்களுக்கு தங்கும் வசதிக்காக தொழிலாளர்கள் தங்கக்கூடிய விடுதிகள் கட்டித் தரப்படும்.

இவ்வாறு பல திட்டங்களை நிறைவேற்றி, அந்த உரிமையோடு தான் இன்று உங்கள் முன் வந்து, உதய சூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.